அசல் வழக்கு எண்: 05/2016

PW – 3 அரங்கநாதன் த/பெ. இராமையன்

நாள் : .19.03.2024.

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் உரிமம் பெற்ற ஆவண எழுத்தரா என்றால் ஆமாம். நான் 1994 ல் இருந்து 2024 டிசம்பர் வரை உரிமம் பெற்றுள்ளேன். நான் தரப்பினர்கள் சொல்லும் சங்கதிகளை ஆவணத்தில் எழுதும் பழக்கம் உடையவர் அல்ல இரு தரப்பினரையும் விசாரித்து தான் ஆவணம் எழுதுவேன். அனைத்து ஆவணங்களையும் விசாரித்து தான் எழுதுவேன். ராஜகுமார், காளிதாஸ் அஸ்வத்தாமன் ஆகியோரிடமிருந்து ஆனந்தவள்ளி சொத்தை கிரயம் வாங்குவதற்காக ஆவணம் எழுதிக்கொடுத்தேன். இது நாள் வரை நான் 700, 800 ஆவணங்கள் எழுதியிருப்பேன். அனைத்து ஆவணங்களையும் எந்த தேதியில் யார், யாருக்கு இடையே ஏற்பட்டது என்று சொல்லமுடியுமா என்றால் நினைவில் உள்ளதை சொல்வேன். எத்தனை ஆவணங்களுக்கு எனக்கு விவரம் தெரியும் என்றால் 25 லிருந்து 50 ஆவணங்களுக்கு தெரியும். கிரய ஒப்பந்தம் 05.02.2013 ல் ஏற்பட்டது. சொத்தின் புல எண் 338 ஆகும். உட்பிரிவு ஞாபகமில்லை. சாட்சி கையொப்பத்தில் மோகனசுந்தரம் போட்டுக்கொடுத்தார். கிரய ஒப்பந்தத்தில் கிரயதொகை, கிரய முன்தொகை ஆகியவை ஆனந்தவள்ளி சொல்லி எழுதினேனா என்றால் இரு தரப்பினரும் சொன்னதை எழுதினேன். எனக்கு சொந்த ஊர் பேராவூரணி. இதற்கு முன்பு ஆனந்த வள்ளி பெயரில் ஆவணம் எழுதியுள்ளேனா என்றால் நினைவில்லை. கிரய ஒப்பந்தம் ஆனந்தவள்ளி கேட்டுக்கொண்டதன் பேரில் என்னால் தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் பிரதிவாதிகள் யாரும்

ஆவணம் எழுத என்னிடம் வரவில்லை என்றால் சரியல்ல. என் முன்பு அவர்கள் கையொப்பம் போடவில்லை என்றால் சரியல்ல. கிரய ஒப்பந்தத்தில் உள்ள கையெழுத்துக்கள் பிரதிவாதிகளுடையது அல்ல என்றால் சரியல்ல. ஆனந்தவள்ளி எனக்கு வேண்டியவர் என்பதால் அவர் கேட்டுக்கொண்டதற்கினங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை**

*Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.*
*s/d- M.Murugan*
*Subordinate Judge,*
*Pattukkottai (FAC)*